# உன்னை காண்பவர்

ஒரு ராஜா தன் நாட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களே என்ன செய்யலாம்? என்று சிந்தித்தார். பின் தன் நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை கொடுத்தார். நீங்கள் வந்து என் அரண்மனையில் இருக்கும் பொருட்களில் ஆளுக்கு ஒரு பொருளை எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு அறிவிப்பை கொடுத்தார். நாட்டு மக்கள் எல்லாருமே வந்து தங்களுக்கு வேண்டிய பொருட்களை எடுத்து கொண்டு போனார்கள். அப்போது அரண்மனை ஓரத்தில் ஒரு வயதானவர் நின்று கொண்டிருந்தார். இதை பார்த்த ராஜா தன் சேவகனை அனுப்பி கேட்க, அவர் எனக்கு எந்த பொருளும் வேண்டாம், ராஜா மட்டும் ஒரு நாள் என் வீட்டுக்கு வர வேண்டும் என்று வருந்தி கேட்டார். ராஜாவும் ஒரு நாளை தேர்ந்தெடுத்து வீட்டிற்கு வர சம்மதித்தார். ஆற்றின் மறு பக்கத்தில் அந்த பெரியவர் வீடு இருந்ததால், தண்ணீரை கடந்து தான் செல்ல முடியும். என்ன செய்வது என்று அவருடைய வேலைக்காரர்கள் யோசித்தார்கள்? சரி என்று ஒரு பாலம் கட்டினார்கள். வீட்டை பார்த்தால் குடிசை வீடு, தலை குனிந்து தான் உள்ளே போகவேண்டும். சரி என்று புதிய வீட்டை நன்றாக கட்டினார்கள். ராஜா உட்கார நல்ல நாற்காலி இல்லை; தண்ணீர் குடிக்க நல்ல பாத்திரம் இல்லை; நல்ல வெளிச்சம் இல்லை என்று அறிந்து அந்த வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும், அந்த பெரியவர் வீட்டுக்கு வந்து விட்டது. புசிப்பதற்கு எல்லாம் தயாராக வந்துவிட்டது. ராஜாவும் குறித்த அந்த நாளில் வந்தார். அந்த பெரியவர் வீட்டிற்குள் பிரவேசித்து சாப்பிட்டுவிட்டு சென்றார். அந்த ஊர் மக்கள் நாங்கள் ராஜாவின் ஒரு பொருளைத்தான் கொண்டு வந்தோம். நீயோ ராஜாவையே உன் வீட்டுக்கு கொண்டு வந்து விட்டாயே! என்று ஆச்சரியப்பட்டார்கள்.

இந்த பெரியவரின் புத்திசாலி தனத்தை பாருங்கள். இவர் அரண்மனையில் ஒரு பொருளைத்தான் எடுத்திருக்க முடியும். ஆனால் ராஜாவே அவர் வீட்டுக்கு வந்ததால், அந்த பெரியவரின் வீட்டுக்கு புதிய பாலம், புதிய வீடு, விலை உயர்ந்த பொருட்கள், நல்ல உணவு இவையெல்லாம் கிடைத்தது.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே!

பரலோக ராஜாவாகிய இயேசு ராஜா நமக்காக அந்த பரலோகத்தை விட்டு இந்த பூமிக்கு எதற்காக வந்தார் தெரியுமா? நம்மை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்கவே வந்தார். நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார் (மத் 9:13). அந்த ராஜா தன் ஜனங்களுக்கு தன்னுடைய பொருளைத்தான் கொடுத்தார். ஆனால் நம் இயேசு ராஜாவோ தம் உயிரையே கொடுத்தார். ஏன் தெரியுமா? உன் பாவங்களை மன்னிக்கவும், உன்மேல் அன்புடையவராய், அக்கரையுடையவராய் தம்மையே பரிகார பலியாக கொடுத்தார். வானத்தையும், பூமியையும், அகிலத்தையும் படைத்த தேவன் உன் மேல் மிகுந்த அன்புள்ளவராய் அக்கரையுள்ளராய் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். அந்த பெரியவரை பாருங்கள்! தன் தேவைக்காக அந்த ராஜாவையே தன் வீட்டுக்கு அழைத்தது போல, நீங்களும் உங்கள் தேவைக்காக நீங்கள் எங்கேயிருக்கிறீர்களோ அங்கேயிருந்து முழங்கால் படியிட்டு ஆண்டவர் இயேசுவை நம்பி கூப்பிடும்போது நிச்சயம் உங்கள் தேவைகள் சந்திக்கப்படும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10) என்று வேதம் சொல்கிறது. நீங்களும் அநேக குறையோடு இருக்கலாம். நல்ல ஒரு வீடு இல்லாமல் இருக்கலாம், வீடு கட்டியும் பல வருடம் அதை முழுமையாக முடிக்க முடியாத நிலைமையில் இருக்கலாம், நல்ல வேலையில்லாமல் இருக்கலாம், கடன் கஷ்டத்தில் இருக்கலாம், வாழ்க்கையில் உயர்வு இல்லையே ஆசீர்வாதமில்லையே என்று கவலைப்படலாம். வறுமையிலும், தரித்திரத்திலும் இருக்கலாம். எல்லாராலும் கைவிடப்பட்டு ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வாழ்க்கையில் தோல்வியோடும், என் வாழ்வல் ஒரு முன்னேற்றமும் இல்லையே என்று கண்ணீரோடு இருக்கலாம். பாவத்தோடும் சாபத்தோடும் இருக்கலாம். ஈசாக்கு என்கிற தேவ மனிதன் ஐசுவரியவானாகி வரவர விருத்தியடைந்து மகா பெரியவனானான் (ஆதி 26:13). உன்னையும் இயேசு வரவர விருத்தியடையவும், பெருகவும், வர்த்திக்கப்பண்ணவும் செய்வார். கவலைப்படாதீர்கள். நீங்கள் வெளியே சொல்லமுடியாத எந்த பிரச்சனைகள் இருந்தாலும், எந்த சூழ்நிலைகள் இருந்தாலும் கவலை வேண்டாம். இப்பொது நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். உங்கள் கவலைகளை இயேசுவிடம் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது எல்லாவிதமான நன்மைகளும் உங்களை தேடிவரும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33) என்று வேதம் சொல்கிறது. எனக்கு அன்பானவர்களே, இந்த ஆண்டவர் இயேசுவிடம் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணியுங்கள். அவர் உங்களை கடைசி வரை நடத்துவார், தாங்குவார், ஏந்துவார், சுமப்பார். ஆண்டவர் இயேசு உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக. ஆமென்! மேலும், இயேசுவை பற்றி அறிய விரும்பினால் அருகில் உள்ள திருச்சபையை அணுகுங்கள்.

ஜெப உதவிக்கு: